**<u>Page No.</u>**

**<u>DEPOSITION OF WITNESS</u>**

**(Chapter X X I I I Code of Criminal Procedure)**

- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

**IN THE COURT OF DISTRICT MUNSIF - CUM JUDICIAL MAGISTRATE THIRUPPUVANAM**

Calender Case :
Miscellaneous : Case No: CC. No.286/**2022**
Preliminary Register :
Sessions :
Deposition of Witness for Prosecution : PW3
Defendant :
Court :

Name : சங்கர் – சிறப்பு சார்பு ஆய்வாளர்
Father' s Name : பாலசுப்பிரமணியன்
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of

---

29.07.2026 CC No.286/2022 அ.சா.3 சங்கர் – சிறப்பு சார்பு ஆய்வாளர்

( 2வது எதிரி ஆஜர். 1வது எதிரி காலமாகிவிட்டார். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் )

**<u>முதல் விசாரணை</u>:**

1) நான் தற்போது திருப்புவனம் காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி சார்பு ஆய்வாளர் திரு. பாலமுருகன் பணிமாறுதல் ஆகி தற்போது வேறு மாவட்டத்தில் பணியில் உள்ளதால் வழக்கின் காலதாமதத்தை தவிர்க்கும் பொருட்டு அவருக்காக என்னை கூடுதல் சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரி சாட்சியம் அளிக்கிறேன். வழக்கு ஆவணங்களை நான் பராமரித்து வரும் வகையிலும் சார்பு ஆய்வாளர் திரு.பாலமுருகன் கையெழுத்து மற்றும் கையொப்பம் எனக்கு நன்கு தெரியும்.

2) கடந்த 06.11.2019ம் தேதியன்று காலை 08.30 மணியளவில் மேற்படி சார்பு ஆய்வாளர் திரு.பாலமுருகன் நிலையப் பொறுப்பிலிருந்தபோது அகரம்

R VENKADESH PRASANTH Digitally signed by R VENKADESH PRASANTH Date: 2026.07.29 13:01:00 +0530

கிராமத்தைச் சேர்ந்த சசிகுமார் மகன் விக்னேஷ்வரன் என்பவர் கொடுத்த புகார் மனுவைப் பெற்று புகாரின் தன்மைக்கு ஏற்ப நிலையக் குற்ற எண். 379/2019 இதச பிரிவுகள் 294(b), 323, 506(i) மற்றும் 354A ன் கீழ் வழக்குப் பதிவு செய்துள்ளார்.

3) மேற்படி புகார் மனுவின் அசலையும் முதல் தகவல் அறிக்கையினையும் இணைத்து கணம் குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம் திருப்புவனம் அவர்களுக்கு அனுப்பியும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்துள்ளார். மேற்படி **முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

4) பின்னர் இவ்வழக்கை சார்பு ஆய்வாளர் திரு.பாலமுருகன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினம் காலை 09.30 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் ராமச்சந்திரன், செந்தில்குமார் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்துள்ளார். பின்னர் பார்வை மகஜரில் மேற்படி சாட்சிகள் கையொப்பம் செய்துள்ளனர். **மேற்படி பார்வை மகஜர் அ.த.சா.ஆ.3 மற்றும் மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**.

5) பின்னர் இவ்வழக்கின் பட்டியல் சாட்சிகளான விக்னேஷ்வரன், தங்கபாண்டி, கலையரசி, தனலெட்சுமி, பூமிநாதன் மற்றும் மகஜர் சாட்சிகள் ஆகியோரை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். சாட்சிகளின் விசாரணையில் சம்பவம் உண்மை என தெரியவந்ததால் இவ்வழக்கின் எதிரி ஜெயபிரகாஷ் என்பவரை தேடி வந்த நிலையில் அவரை 11.11.2019ம் தேதியன்று 10.00 மணியளவில் திருப்புவனம் தாலுகா, அகரம் பேருந்து நிறுத்தம் அருகே வைத்து காரணம் கூறி கைது செய்து நிலையம் கொண்டு வந்து தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். மற்ற எதிரிகள் 14.11.2019ம் தேதியன்று மாண்புமிகு மாவட்ட அமர்வு நீதிமன்றம் சிவகங்கையில் முன்பிணை பெற்று தக்க பிணையில் சென்றதால் சார்பு ஆய்வாளர் அவர்களால் கைது செய்ய இயலவில்லை.

6) அதன் பின்பு பாதிக்கப்பட்ட அ.சா.2 தனலெட்சுமி என்பவரை 15.11.2019ம் தேதியன்று வேண்டுகோள் கடிதத்துடன் அவரை 164 வாக்குமூலம் பதிவு செய்வதற்காக இந்நீதிமன்றத்தில் ஆஜர் செய்துள்ளார். அவர் கொடுத்த வாக்குமூலத்தை பெற்றுள்ளார். **மேற்படி அ.சா.2 கொடுத்த 164 குவிமுச வாக்குமூலம் அ.த.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. அதன் பின்பு சார்பு ஆய்வாளர் தனது விசாரணையை முடித்து 1, 2 எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(b), 323, 506(i) மற்றும் 354A ன் கீழ் கடந்த 21.11.2019 ம் தேதி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார். மற்ற இரண்டு எதிரிகள் சட்டமுரணான

R VENKADESH PRASANTH
Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.07.29 13:01:16 +0530

இளஞ்சிறார்கள் என்பதால் அவர்களுக்கு எதிரான குற்ற இறுதி அறிக்கை இளஞ்சிறார் நீதிக்குழுமம் சிவங்கையில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

புகார் மனுவைப் பெற்று சரிவர விசாரணை செய்யாமல் எதிரி மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார் என்றால் சரியல்ல. சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை தயார் செய்துள்ளார் என்றால் சரியல்ல. 2வது எதிரியை சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சொன்ன விதத்தில் கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. பார்வை மகஜர், மாதிரிவரைபடம் சம்பவ இடம் செல்லாமல் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து வழக்கின் தோதிற்கு ஏற்ப தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me in open court readover/ interpreted to the witness in Tamil and acknowledged by him/ her to be correct.

R VENKADESH PRASANTH

Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.07.29 13:01:22 +0530

District Munsif Cum Judicial Magistrate,
Thiruppuvanam.